





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## ஏப்ரல் - 2019

*We Are Here..!! To Guide You..!!*







# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## ஏப்ரல் - 19.04.2019


Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்
- பொருளாதார நிகழ்வுகள்






## இந்திய நிகழ்வுகள்

- மக்களவை தேர்தல் 2019-யை முன்னிட்டு வாக்களிப்பது எப்படி இந்தியா என்ற விழிப்புணர்வு டூடுல் ஒன்றை கூகுள் நிறுவனம் தனது முகப்பு பக்கத்தில் வெளியிட்டுள்ளது.
    - **அதில், GOOGLE என்ற வார்த்தையில் ஒரு விரல் புரட்சி டூடுல் அமைந்துள்ளது.**

- **சீனாவை விட 2 மடங்கு வேகத்தில் இந்தியாவின் மக்கள் தொகை பெருகி வருவதாக யுஎன்எப்பிஏ அறிக்கையில் தெரிவித்துள்ளது.**
    - இந்தியாவின் மக்கள் தொகை 2010 முதல் 2019 வரையிலான காலக்கட்டத்தில் 1.2 சதவீதம் அதிகரித்துள்ளது.
    - இது உலக அளவிலான சராசரி மக்கள் தொகை அதிகரிப்பு விகிதமான 1.1 சதவீதத்தை விட அதிகமாகும். ஆனால் சீனாவில் மக்கள் தொகை அதிகரிப்பு 0.5 சதவீதமாகும்.
    - **2018ல், 760 கோடியாக இருந்த உலக மக்கள் தொகை 2019ல் 770 கோடியாக உயர்ந்துள்ளது.**

- சீனாவில் இருந்து அறிமுகப்படுத்தப்பட்ட டிக்-டாக் என்னும் செயலியானது இந்தியாவில் பயன்படுத்த முடியாதபடி கூகுள் ப்ளேஸ்டோரில் இருந்து நீக்கியுள்ளது.
    - இச்செயலியானது சீனாவில் இருந்து கடந்த 2016ம் ஆண்டு செப்டம்பர் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

- இந்திய தொலைத்தொடர்பு வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை சென்ற பிப்ரவரி மாதத்தில் 120.54 கோடியை எட்டியுள்ளது.

- மரண தண்டனை விதிக்கப்பட்ட பிறகு மன நோயால் பாதிக்கப்படும் கைதிகளுக்கு, அந்த தண்டனையை ரத்து செய்யலாம் என்று உச்சநீதிமன்றம் வரலாற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

## உலக நிகழ்வுகள்

- வடகொரியாவில் “நிலம், கடல் மற்றும் விமானத்தில் இருந்து செலுத்தும் வகையிலான ஆற்றல் மிக்க ஆயுதம் சோதித்து பார்க்கப்பட்டதாகவும், இந்த ஆயுதம் பல்வேறு இலக்குகளை

துல்லியமாக தாக்கி அழித்ததாகவும் அந்நாட்டின் அரசு ஊடகமான கே.சி.என்.ஏ. தெரிவித்துள்ளது.

- நேபாளத்தின் முதல் செயற்கைக்கோளான நேபாளிசாட்-1, அமெரிக்காவின் வர்ஜீனியா மாகாணத்திலுள்ள ஏவு தளத்திலிருந்து புதன்கிழமை அன்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டுள்ளதாக நேபாள அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அகாதெமி **(என்ஏஎஸ்டி)** தெரிவித்துள்ளது.
  - **பூமியை 400 கி.மீ., தொலைவில் சுற்றிவரவிருக்கும் அந்த செயற்கைக் கோள், தொடக்கத்தில் சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஒரு மாதத்துக்கு நிலைநிறுத்தப்படும்.**
  - **நேபாள தேசியக் கொடியும், என்ஏஎஸ்டி அமைப்பின் சின்னமும் அந்த செயற்கைக்கோளில் பொறிக்கப்பட்டுள்ளதாக அந்த ஆய்வு அமைப்பு தெரிவித்துள்ளது.**

- பூமியில் விழுந்து பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய சிறிய விண்கற்களையும் கண்டறிவதற்கான எளிய மற்றும் புதுமையான முறையை அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

- உலக தரம் வாய்ந்த இந்தியாவின் முதல் உல்லாச கப்பல் **"கர்னிகா"** தனது முதல் பயணத்தை நிறைவு செய்துள்ளது.
  - நேற்று மாலை மும்பையில் இருந்து புறப்பட்ட கர்னிகா இரவு முழுவதும் பயணித்து கோவாவை அடைந்ததுள்ளது.
  - இந்த கப்பலில் சுமார் **2700 பேர் பயணம் செய்யலாம் எனவும், இதன் நீளம் 250 மீட்டர் எனவும், 14 மாடிகளை கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

## பொருளாதார நிகழ்வுகள்

- **ஐசிஐசிஐ வங்கியானது ஏடிஎம் இயந்திரம் மூலமாகவே கடன் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி உள்ளது.**
  - ஐசிஐசிஐ வங்கி, தனது வாடிக்கையாளர்களில் தகுதியானவர்களை கிரெடிட் அனாலிசிஸ் நிறுவனங்கள் மூலம் தேர்வு செய்து அவர்களுக்கு **ஏ.டி.எம். இயந்திரம் மூலமாகவே 15 லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கும்படி**

**ஏற்படுத்தப்பட்டுள்ளது.**

- இம்முறையில், ஏடிஎம் மிஷினில் தனிநபர் கடனுக்கான விண்ணப்பத்தில் கேட்கப்படும் விவரங்களைப் பதிவு செய்தால் கடன் தொகையானது வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்படும்.

We Shine Academy™